மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினையை அவையில் எழுப்புதல்

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த அறிவிப்புக்கு நான் அனுமதி மறுத்து இருக்கிறேன். அதுபற்றிப் பேசுவதாக இருந்தால் இங்கே பேரவையில் பேச முடியாது என்பது உங்களுக்குத் தெரியும். (குறுக்கீடு) அசாதாரணமான சூழ்நிலை என்பது, இங்கே பேசக்கூடிய விஷயங்களைத்தான் நான் அனுமதிக்க முடியும். (குறுக்கீடு) இங்கே பேரவையில் வைக்கப்பட்ட விவாதங்கள், பேரவையில் இருக்கக்கூடிய பிரச்சினைகள் இவற்றைத்தான் இங்கே பேச முடியும். வேறு ஒரு ஃபோரத்தில் பேசக் கூடிய பிரச்சினையை இங்கே எழுப்ப முடியாது. (குறுக்கீடு) பேரவைக்குச் சம்பந்தம் இல்லாத பிரச்சினையை இங்கே பேச முடியாது. இன்னொரு ஃபோரத்தில் பேசப்பட வேண்டிய பிரச்சினையை இங்கே பேச முடியாது. (குறுக்கீடு) This is not proper forum for that discussion. அதனால்தான் உங்களுக்குச் சொல்லி இருக்கிறேன். (குறுக்கீடு) It has to be discussed in another forum. (குறுக்கீடு) அது பிரச்சினை இல்லை. ஃபோரமே இது அல்ல. (குறுக்கீடு) ஃபோரமே இது இல்லை என்கிறபோது அதற்கு நான் அனுமதி மறுத்து

இருக்கிறேன். அனுமதி மறுத்த பிரச்சினையை இங்கே எழுப்புவதற்கு விதிகளில் வழியில்லை. அது இன்னொரு ஃபோரத்தில் நீங்கள் பேச வேண்டிய பிரச்சினை. எந்த வகையிலேயும் இந்த ஃபோரம் அதற்கு சம்பந்தம் இல்லாதது. பிரச்சினையே இன்னொரு ஃபோரத்தில் போய்ப் பேசுங்கள் என்று அனுப்பப்பட்ட பிரச்சினை. (குறுக்கீடு) இந்தப் பிரச்சினை இங்கே பேசுவதற்குரிய பிரச்சினை அல்ல. (குறுக்கீடு) இங்கே முடிவெடுப்பது என்பது எல்லாம் மெஜாரிட்டியை வைத்துத்தான். (குறுக்கீடு) சட்டமன்றப் பேரவையைப் பொறுத்தமட்டில் என்ன பிரச்சினையாக இருந்தாலும் கடைசியில் நான் இங்கே இருக்கிற அவை உறுப்பினர்களுடைய மெஜாரிட்டியை வைத்துத்தான் முடிவு எடுக்க வேண்டும். (தொடர்ந்து மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-25

அதுதான் இந்தப் பேரவைக்கு இருக்கிற நியதி. அந்த மெஜாரிட்டி என்பதில் துளிக்கூட சலனம் இல்லை. சேதாரம் இல்லை, என்கிறபோது (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பிரச்சினையை இங்கே எழுப்புவது எந்தவகையிலேயும் நியாயம் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) இங்கே பேசக்கூடிய எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், கடைசியிலே எனக்கு விடப்பட்டிருக்கிற பணி, பேரவையின் முடிவைக் கேட்டுச் சொல்வதுதான். என்ன பிரச்சினையை நீங்கள் இங்கே வைத்தாலும் நான் அதனுடைய மெஜாரிட்டி இருக்கிறதா என்று அறிந்துதான் முடிவெடுக்க வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் சப்தம் போட வேண்டாம். நீங்கள் சப்தம் போடுகிற காரணத்தாலேயே நியாயம் ஆகிவிடுமா? நான் அனுமதி மறுத்திருக்கிறேன். (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்திருக்கிறபொழுது எப்படிப் பேச முடியும்? நான் அனுமதி மறுத்தால் உங்களுக்கு எப்படி மைக் கொடுப்பார்கள்? (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்திருக்கிறேன். மறுத்த பிரச்சினையைப் பேசுவதற்கு எந்தவகையிலேயும் இடமில்லை. (குறுக்கீடு) இங்கே பேச நான் அனுமதி அளிப்பதற்குச் சில வரைமுறைகள் இருக்கின்றன. (குறுக்கீடு) இங்கே டிஸ்கஸ் பண்ண முடியாத பிரச்சினையை - வேறு ஒரு ஃபோரத்தில் - லீகல் ஃபோரத்தில் டிஸ்கஸ் பண்ணக்கூடிய ஒரு பிரச்சினையை இங்கே எப்படி டிஸ்கஸ் செய்ய முடியும்? (குறுக்கீடு) நீங்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள் என்று சொல்கிறவர்களே, அவர்களே லீகல் ஃபோரத்திற்குப் போங்கள் என்று சொன்னதற்குப் பிறகு நீங்கள் இங்கே வந்து என்னிடத்தில் அனுமதி கேட்பதை (குறுக்கீடு) நான் அனுமதிக்க முடியாது. நான் அனுமதிக்கவில்லை. நான் அனுமதிக்காததற்குப் பின்னர் எதிர்க்கட்சித்

தலைவர் இந்த அளவிற்குப் பேரவையின் இதர அலுவல்களுக்குக் குந்தகம் ஏற்படுத்துவது முறை அல்ல; (குறுக்கீடு). நான் ஏற்கனவே அனுமதி மறுத்த பிரச்சினையை இங்கே எழுப்புவதற்கு விதிகளில் எந்த வழியிலேயும் இடம் இல்லை (குறுக்கீடு) 56-இல் நான் மறுத்திருக்கிறேன். (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்திருக்கிறேன். (குறுக்கீடு) அதை அங்கே வந்து கேட்க வேண்டும். இங்கே கேட்க முடியாது. (குறுக்கீடு) நான் சொல்கிறேன் கேளுங்கள். நான் அனுமதி மறுத்த பிரச்சினையை இங்கே வந்து கிளப்ப முடியாது. (குறுக்கீடு) 57-இல் கிளப்ப முடியாது. (குறுக்கீடு) அதற்குப் பிறகும் படியுங்கள். நான் அனுமதித்தால்தான் இங்கே 57, நான் அனுமதிக்காதபோது...(குறுக்கீடு) 58-ஐப் படியுங்கள். (குறுக்கீடு) 58-ஐப் படியுங்கள். 57, நான் அனுமதித்தால்– நான் அனுமதிக்கவில்லை என்னும்பொழுது 58, `The Speaker may withhold consent to the matter being raised before the House and in that case it shall be communicated to the member together with the reasons therefor... (குறுக்கீடு) நான் ரீசன்தான் சொல்லியிருக்கிறேன். அது இந்த ஃபோரம் அல்ல. (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) நான் சொல்லாமல் யார் சொல்லுவது? இங்கே நான் ரீசன் சொல்லி விட்டேன். Speaker has to decide. (மேசையைத் தட்டும் ஒலி) `Speaker cannot tell' என்று சொல்லுகிற அதிகாரம் எதிர்க்கட்சித் தலைவருக்குக் கிடையாது. (குறுக்கீடு) அதற்குப் பிறகு ...and the member shall not raise the matter as such in the House.' என்றும் விதியிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏன்? (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்து உங்களுக்குக் கம்யூனிகேட் செய்ததற்குப் பிறகு நீங்கள் எந்த வகையிலேயும் இங்கே எழுப்ப முடியாது. (குறுக்கீடு) இங்கே எழுப்ப முடியாது என்கிறபொழுது எப்படி எழுப்புகிறீர்கள்? எழுப்ப முடியாது (குறுக்கீடு) எழுப்ப முடியாது என்கிறபொழுது எப்படி முடியும்? (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்திருக்கிறேன். நான் அனுமதி மறுத்த பிரச்சினையை எந்த அளவிலேயும் நீங்கள் எழுப்ப முடியாது. (குறுக்கீடு) இல்லை. எழுப்ப முடியாது.

3. கவன ஈர்ப்பு

(அ) கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் சாலை பழுதடைந்துள்ளதால் போக்குவரத்தும், பொதுமக்களும் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு.